**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**

**CC 230/2025**
LW 7 PW 6

| | | | |
|---|---|---|---|
| Name | சரத்குமார் | Caste | |
| Father's/Husband Name | தங்கசாமி | Calling | |
| Village | காரை நகர் திருப்பூண்டி | Religion | |
| Taluk | | Age | 30/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969
(Central Act 44 of 1969) on the **2nd day of July 2026**

Signature of witness.

**எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து கொத்தனராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 14.04.2025 ம் தேதி இரவு இரவு சுமார் 9.30 மணியளவில் சண்முகம் பெட்டிக்கடைக்கு நான் சென்று கொண்டிருந்தபோது புதுப்பாலம் அருகே போலீசார் விபத்து நடந்தது தொடர்பாக விசாரித்து வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் மேற்படி கையொப்பத்தினை செய்து கொடுத்தேன். **பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த ஆவணத்தில்

என்ன எழுதப்பட்டிருந்தது என்பது குறித்து எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு என்றால் அரை கி.மீ தூரம் இருக்கும்.

| |
|---|
| சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.<br><br>ஒம்/–ர.மீனாட்சி எம்.எல்.,<br>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,<br>கீழ்வேளூர். |

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**

**CC 230/2025**
LW 6  PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | அம்பிகாபதி | Caste | |
| Father's/Husband Name | சுந்தரமூர்த்தி | Calling | |
| Village | காரை நகர் திருப்பூண்டி | Religion | |
| Taluk | | Age | 33/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969

(Central Act 44 of 1969) on the **2nd day of July 2026**

Signature of witness.

**எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை.**
**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து கொத்தனராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 14.04.2025 ம் தேதி இரவு சுமார் 9 9.30 மணியளவில் சண்முகம் பெட்டிக்கடைக்கு நான் சென்று கொ்ணடிருந்தபோது அங்கு கடைக்கு அருகே போலீசார் விபத்து நடந்தது தொடர்பாக விசாரித்து வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் மேற்படி கையொப்பத்தினை செய்து கொடுத்தேன். **பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இரவு நேரத்தில் நான் வேலைக்கு சென்று திரும்பி வந்து பெட்டிக்கடை அருகே நின்று கொண்டிருந்தபோது போலீசார் கையெழுத்து கேட்டதின் பேரில் கையெழுத்து செய்து கொடுத்தேன்

என்றால் நான் கடைக்குத்தான் சென்றிருந்தேன். நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது குறித்து எனக்கு தெரியாது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/–ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.